சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

திருமப்ப கவுடர் என்னுடைய தாத்தா என்றால் சரி தான். கெம்பக்காள் என்பவர் என்னுடைய பாட்டி என்றால் சரி தான். தாவா சொத்து திருமப்ப கவுடருக்கும், கெம்பக்காளுக்கும் சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. திருமப்ப கவுடர், கெம்பக்காள், காளப்ப கவுடர் மற்றும்அவரது மனைவி ரங்கம்மாள் ஆகியோர்கள் கூட்டாக உழைத்து சம்பாதித்த சொத்து ஆகும். வா.சா.ஆ.1 திருமப்ப கவுடர் பெயரிலும், வா.சா.ஆ.2 கெம்பக்காள் பெயரிலும், வா.சா.ஆ.3 திருமப்ப கவுடர் பெயரிலும் உள்ளது என்றால் அவர்கள் கூட்டாக உழைத்து தான் வாங்கினார்கள். வாதி தனக்கும் பாகம் வேண்டும் என்று கூறி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலமும் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ தாவா சொத்துக்களை திருமப்ப கவுடர், கெம்பக்காள், காளப்ப கவுடர் மற்றும் ரங்கம்மாள் ஆகியோர் கூட்டாக உழைத்து சம்பாதித்ததாக கூறவில்லை என்றால்

சரியல்ல. பிராது தபசில் சொத்துக்கள் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகியோர்களது சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளுக்கு ஒரு மகனும், 3 மகள்களும் உள்ளனர் என்றால் சரி தான். காளப்ப கவுடர் எனது அப்பா என்றால் சரி தான். அவர் திருமப்ப கவுடரின் மகன் என்றால் சரி தான். ரங்கம்மாள், சுப்பம்மாள் மற்றும் காளம்மாள் ஆகியோர்கள் திருமப்ப கவுடரின் மகள்கள் என்றால் சரி தான். ரங்கம்மாளின் மகன் தான் இந்த வழக்கின் வாதி என்றால் சரி தான். காளம்மாளின் மகள் தான் 4 ம் பிரதிவாதி சரஸ்வதி என்றால் சரி தான். என் அப்பா உடன் பிறந்த சகோதரிகளில் சுப்பம்மாள் என்பவர் திருமணம் ஆகாமலேயே இறந்து விட்டார் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி குழந்தை பெற்ற பின்னரே இறந்தார். குழந்தையும் இறந்து விட்டது. சுப்பம்மாளின் கணவரான மாதைய கவுடரும் இறந்துவிட்டார். சுப்பம்மாளுக்கு தற்போது வாரிசுகள் இல்லை. என்னுடைய எதிர் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலேயோ சுப்பம்மாளுக்கு திருமணம் ஆகி குழந்தை இறந்த விவரத்தை சொல்லவில்லை என்றால் சரி தான். பிளிச்சி கிராமத்தில் உள்ள நிலத்தின் புல எண் என்ன என்றால் தெரியவில்லை. அந்த சொத்து எனது பாட்டி கெம்பக்காளுக்கு அவரது சகோதரர் எழுதிக் கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. கெம்பக்காளுக்கு திருமப்ப கவுடர் எழுதிக் கொடுத்த சொத்து ஆகும். அதற்கான ஆவணம் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் தாக்கல் செய்து உள்ளேன். அந்த சொத்துக்கும், திருமப்ப கவுடருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், அந்த சொத்து கெம்பக்காளுக்கு அவரது சகோதரர் எழுதிக் கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்தை கெம்பக்காள் உயிருடன் இருந்த வரை அவர் தான் அனுபவித்து வந்தார் என்றால் சரி தான். அந்த சொத்தை கெம்பக்காள் தனது பிள்ளைகளுக்கு பிரித்து கொடுத்து விட்டார். கெம்பக்காள் அந்த சொத்துக்களை தனது பெண் பிள்ளைகளுக்கு மட்டும் கொடுத்து விட்டார்

என்றால் பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை பெண் பிள்ளைகளுக்கும், சிக்காரம் பாளையத்தில் உள்ள சொத்துக்களை ஆண் பிள்ளைகளுக்கும் பிரித்து கொடுத்து விட்டார். அதற்கு எதாவது ஆவணம் ஏற்படுத்தினார்களா என்றால் இல்லை. வாய் மொழியாகத் தான் பிரித்துக் கொண்டார்கள். சிக்காரம் பாளையத்தில் உள்ள ஒரு சொத்து மட்டும் கெம்பக்காளுக்கு பாத்தியப்பட்டும், மற்ற 2 சொத்துக்களும் திருமப்ப கவுடருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. சிக்காரம் பாளையத்தில் உள்ள சொத்துக்களில் பெண் பிள்ளைகளுக்கு சொத்து எதுவும் இல்லை என எதுவும் கூறவில்லை என்றும், பிளிச்சியில் உள்ள சொத்துக்களை கெம்பக்காள் தனது பெயரில் இருந்ததால் தனது பெண் பிள்ளைகளுக்கு கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. கெம்பக்காள் இறந்த பின்பு பிளிச்சியில் இருந்த சொத்துக்களை அவரது 3 பெண் வாரிசுகளும் விற்பனை செய்தார்கள் என்றால் சரி தான். அவ்வாறு அவர்கள் சொத்தை விற்ற விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் தான் 2 ம் பிரதிவாதி என்றால் சரி தான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பத்தி 4 ல் *ஆனால் சண்முகம் பெயரில் ஏற்பட்ட அதே கிரையப் பத்திரத்தில் இவ்வழக்கில் 2 ம் பிரதிவாதியாகிய நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது* என்று கூறி உள்ளேன் என்றால் சரி தான். அந்த ஆவணத்தை நான் தெரிந்து தான் சாட்சி கையொப்பம் போட்டேன் என்றால் பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் கெம்பக்காளின் பெண் வாரிசுகளுக்கு என்று எழுதிக் கொடுத்தால் தான், சிக்காரம்பாளையத்தில் உள்ள சொத்துக்கள் ஆண் வாரிசுகளுக்கு வரும் என்று சொன்னதால் தான் சாட்சி கையொப்பம் செய்தேன். சிக்காரம் பாளையத்தில் உள்ள சொத்துக்களை தாங்கள் பாகம் கோரவில்லை என்றும், பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை மட்டும் தாங்கள் வைத்துக் கொள்வதாக கெம்பக்காளின் பெண் வாரிசுகள் ஆவணம் எதாவது எழுதிக் கொடுத்தார்களா என்றால்

இல்லை. எனது அப்பா காளப்ப கவுடர் எந்த தேதியில் இறந்தார் என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தேதி தெரியாது. ஆனால் இறந்து சுமார் 17 ஆண்டுகள் இருக்கும். 31.05.2006 அன்று எனது அப்பா உயிருடன் இருந்தார் என்றால் இல்லை. ஆனால் விலை பேசும் போது உயிருடன் இருந்தார். அதன் பிறகு 2 வருடங்கள் கழித்து தான் பத்திரம் பதிவு செய்தார்கள். அவ்வாறு அவர்கள் விற்ற விவரம் தெரிந்த பின்னர் பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களில் நானோ, எனது சகோதரர்களோ பங்கு எதுவும் கேட்கவில்லை என்றால் எங்களுக்கு சிக்காரம் பாளைய சொத்துக்களை கொடுப்பதாக சொன்னதால் பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை நாங்கள் கேட்கவில்லை. சிக்காரம் பாளையத்தில் உள்ள சொத்துக்கள் தொடர்ந்து திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் பெயரில் இருந்து வந்தது என்றால் இல்லை. அந்த சொத்தை பொறுத்து விற்பனையோ, வேறு வில்லங்கமோ எதுவும் செய்யவில்லை என்றால் சரி தான். அவர்கள் இருவரும் உயிருடன் இருந்த வரை எந்தவித ஆவணங்களும் ஏற்படுத்தவில்லை என்றால் சரி தான். அவர்கள் இறந்த பின்னர் அவரது வாரிசுகளும் அதன் பின்னர் நாங்களும் கூட்டாக சுவாதீனத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை கெம்பக்காள் அவர் உயிருடன் இருந்த போதே அவரது பெண் மகள்களுக்கு கொடுத்து விட்டதால், கெம்பக்காளின் வாரிசுகள் அந்த சொத்தை விற்கும் போது அது பற்றி தெரிந்து தான் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், அதனால் தான் அந்த சொத்தில் நான் பாகம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் பாகம் கோரி வாதியும், 4 ம் பிரதிவாதியும் வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பி இருந்தார்கள் என்றால் சரி தான். அந்த அறிவிப்பிற்கு 3 ம் பிரதிவாதி பாகப் பிரிவினை கோரியுள்ளார் என்று மட்டும் கூறி விட்டு விளக்கமான அறிவிப்பு பின்னர் அளிக்கப்படும் என பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரி தான். அதன் பிறகு இந்த

வழக்கு தாக்கல் செய்யும் வரை எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை என்றால் சரி தான். வாதிக்கும், 4 ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் பங்கு இருப்பதால் தான் விளக்கமான பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. வாதி பிறந்து சுமார் 4 ஆண்டுகள் கழித்து தான் திருமப்ப கவுடர் இறந்தார் என்றால் சரியல்ல. கெம்பக்காள் இறப்பதற்கு சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்னர் தான் திருமப்ப கவுடர் இறந்தார் என்றால் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேல் இருக்கும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா.கெங்காராஜ்

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.